# இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களும் வாக்களிக்கப்பட்ட முறையும்
## 1982 ஒக்ரோபர் 20

1981 யூன் இரவு ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழில் பிரசன்னமாக இருந்தபோது யாழ் நூலகம் எரிக்கப்பட்டு பல அசம்பாவிதங்கள் இடம்பெற்ற நிலையில் 1982 தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தல் இடம்பெற்று அடுத்த ஆறு மாதங்களிலேயே ஒரு பெரும் இனக்கலவரம் ஏற்படுவதற்கான நிலைமைகள் யாழில் உணரப்பட்ட நிலை. இத்தேர்தலில் ஜே ஆர் ஜெயவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகவும் கொப்பேகடுவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகவும் குமார் பொன்னம்பலம் தமிழ் கொங்கிரஸலும் போட்டியிட்டனர். ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின் இடம்பெற்ற முதலாவது தேர்தல் இதுவாகும். இதில் ஜே ஆர் ஜெயவர்த்தன முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

| மாவட்டம் | ஐதேக | சுக | குமார் பொ | அ. வாக்குகள் | மொ. வாக்குகள் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 44,780<br>20.54% | 77,300<br>35.46% | 87,263<br>40.03% | 228,613<br>46.31% | 493,705 |
| வன்னி | 32,834<br>46.42% | 23,221<br>32.83% | 11,521<br>16.29% | 73,186<br>61.45% | 119,093 |
| மட்டக்களப்பு | 48,094<br>40.05% | 21,688<br>18.06% | 47,095<br>39.22% | 122,955<br>71.29% | 172,480 |
| திகாமடுல்ல | 90,772<br>56.39% | 53,096<br>32.99% | 8,079<br>5.02% | 163,071<br>79.83% | 204,268 |
| திருகோணமலை | 45,522<br>48.64% | 31,700<br>33.87% | 10,068<br>10.76% | 95,391<br>71.38% | 133,646 |
| இலங்கை முழுவதும் | 3,450,811<br>52.91% | 2,548,438<br>39.07% | 173,934<br>2.67% | 6,602,617<br>81.06% | 8,145,015 |